இணைப்பு 1

[600-ம் பக்கங்களில் 780 எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற் குரிய விடையைக் காண்க.]

There was no dispute between the workmen and the management of Madras Rubber Factory during September 1971. But early by 17th April 1971, the workmen of the Madras Rubber Factory, Madras numbering about 1,600 went on strike in support of their demands, inter alia, for increased wages and Dearness Allowance. Since no settlement was possible on the direct negotiations between the parties to the dispute and on the conciliatory talks held both by the Labour Officer, and the Commissioner of Labour, the Minister for Labour, took up the matter on 22nd June 1971, and after conducting several rounds of talks, advised the parties at the final discussion held on 29th June 1971, to arrive at a settlement accepting a wage increase of Rs. 57 p.m. The Union did not accept the above proposal even on 5th July 1971. Thereupon the Government referred the dispute over wages, Dearness Allowance and incentive payments for adjudication by the Industrial Tribunal, and also prohibited the continuance of strike. Eventually, all the workers returned to work by 21st July 1971.

Again on 17th August 1971, the workers of Madras Rubber Factory and other factories went on a token strike in protest against the arrest of Thiru R. Kuchelar, President of the Union. They resumed duty on 18th August 1971.

The Management and the union representatives met the Minister for Labour on 13th October 1971 and as a result of his good offices, an understanding has been reached in regard to wages and Dearness Allowance on the basis of two additional increments being given in the existing wage scales. It is expected that a joint memorandum would be filed by the parties before the Industrial Tribunal, Madras to whom the dispute has already been referred for adjudication.

1971 செப்டம்பர் திங்களில், சென்னை ரப்பர் தொழிற் சாலையின் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே தகராறு எதுவும் ஏற்படவில்லை. ஆனால் 1971 ஏப்ரல் 17-ஆம் நாளளவில் சென்னை ரப்பர் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் சுமார் 1,600 பேர் கூடுதல் ஊதியம், அதிகவிலைப்படி போன்ற பல கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். தகராறுக்குரிய இருதரப்

பினருக்குமிடையே நடந்த நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலமும் தொழிலாளர் நல அதிகாரியும் தொழிலாளர் நல ஆணையரும் நடத்திய இணக்கப் பேச்சுவார்த்தைகள் மூலமும் உடன்பாடு எதுவும் ஏற்படாமையால், தொழிலாளர் நல அமைச்சர் 22-6-1971-ம் நாளன்று இத்தகராறுக்குத் தீர்வு காண விரைந்தார். பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர் 29-6-1971 அன்று நடந்த இறுதிப் பேச்சு வார்த்தையின்போது திங்கள் ஒன்றுக்கு ரூ. 57 ஊதிய உயர்வை ஏற்றுக் கொண்டு ஓர் உடன்பாட்டுக்கு வருமாறு இரு தரப்பினருக்கும் ஆலோசனை கூறினர். தொழிலாளர் சங்கம் 5-7-1971-ஆம் நாளன்றும்கூட மேற்கண்ட ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் பின்னர், ஊதியங்கள், அகவிலைப்படி, ஊக்கத் தொகைகள் ஆகியவை குறித்த தகராறைத் தீர்ப்பதற்காகத் தொழில் நடுவர் நீதிமன்றத்திற்கு அரசு அனுப்பியதோடு தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வதையும் தடை செய்தது. இறுதியாக 21-7-1971-ஆம் நாளளவில் தொழிலாளர் அனைவரும் பணிக்குத் திரும்பினர்.

மீண்டும் 17-8-1971-ஆம் நாளன்று, தொழிலாளர் சங்கத் தலைவர் திரு ஆர். குசேலர் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னை ரப்பர் தொழிற்சாலைத் தொழிலாளர்களும் ஏனைய தொழிற்சாலைகளின் தொழிலாளர்களும் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். 18-8-1971-ஆம் நாளன்று அவர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பினர்.

நிர்வாகத்தினரும் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் 13-10-1971-ஆம் நாளன்று தொழிலாளர் நல அமைச்சரைச் சந்தித்தனர். அவர் மேற்கொண்ட நல்முயற்சிகளின் பலனாக, தற்போதுள்ள ஊதிய வீதங்களில் கூடுதலாக இரு ஊதிய உயர்வுகள் கொடுக்கப்படுவதன் அடிப்படையில் ஊதியங்கள், அகவிலைப்படி குறித்து ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இத்தகராறு தீர்ப்புக்காக சென்னை தொழில் நடுவர் நீதிமன்றத்திற்கு முன்னரே அனுப்பப்பட்டுள்ளதால், இரு தரப்பினரும் கூட்டாக ஒரு மனுவை மேற்படி நடுவர் மன்றத்தின் முன்பு தாக்கல் செய்துள்ளனர்.